# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2398/12 - 2024 අගෝස්තු මස 20 වැනි අඟහරුවාදා - 2024.08.20

*2398/12 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*மாநகர சபையின் அதிகார வரம்பிற்குள் பேணப்படும் கழிவு நீர் வடிகாலமைப்புச் சேவைகளுக்கான கட்டணங்களை நிர்ணயிப்பதில் கொழும்பு மாநகர சபையால் உரியதாக்கிக் கொள்ளப்பட வேண்டிய அளவுகோல்கள்*

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்2310/ 22 ஆம் இலக்க மற்றும் 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் வெளியிடப்பட்ட, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர்விளைவான) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அதிகாரமான மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் 326 ஆம் பிரிவின் கீழ்யான கொழும்பு மாநகர சபையின்அதிகார வரம்பிற்குள் பேணப்படும் கழிவுநீர் வடிகாலமைப்பு சேவைகளுக்கான கட்டணங்களை நிர்ணயிப்பதில் கொழும்பு மாநகர சபையால் உரியதாக்கிக் கொள்ளப்பட வேண்டிய அளவுகோல்களின் 4 ஆம் பிரிவின் கீழ் எனக்குப் பணிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம்,கொழும்பு மாநகர சபையின் அதிகார வரம்பிற்குள் பேணப்படும் கழிவுநீர் வடிகாலமைப்பு சேவைகளுக்கான கட்டணங்களை நிர்ணயிப்பதில் கொழும்பு மாநகர சபையால் உரியதாக்கிக் கொள்ளப்பட வேண்டிவை என என்னால் தீர்மானிக்கப்பட்ட அளவுகோல்கள் இங்கு கீழே அட்டணையில் உள்ளடக்கப்பட்டு இங்கு வெளியிடப்படுவதாக அறிவிக்கின்றேன்.

எஸ். கே. ஜயசுந்தர,
உள்ளூராட்சி ஆணையாளர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண மாகாண சபை கட்டடம்,
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.


1A - PG 6831 — 09 (2024/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

*01.* ஏதேனும் ஒரு சுற்றாடலினது மாதாந்த கழிவு நீர்க்கட்டணமானது, பயன்பாட்டுக் கட்டணம், மாதாந்த சேவைக் கட்டணம், பிற கட்டணங்கள் மற்றும் பொருந்தக்கூடிய வரிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

*02.* கொழும்பு மாநகர சபையின் அதிகார வரம்பிற்குள் பேணப்படும் கழிவு நீர் வடிகாலமைப்பு சேவைகளுக்கான கட்டணங்களை நிர்ணயிப்பதில் அனைத்து சேவை பயனாளிகளும் பின்வரும் வகைக்குரிய வாடிக்கையாளர்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வகையைச் சேர்ந்த வாடிக்கையாளருக்கும் தனித்தனியாக கட்டணம் அறவிடுவது தீர்மானிக்கப்பட வேண்டும்.

| வாடிக்கையாளர் வகை | நீர் நுகர்வு வகை இலக்கம் மற்றும் வகைகள் | கட்டண ஒழுங்கு முறை |
|---|---|---|
| இல்லங்கள் மற்றும் கூட்டாட்சி இல்லங்கள் | 10 - இல்லம்<br>11- சபை உத்தியோகபூர்வ இல்லம்<br>13- அரச குடியிருப்பு<br>14- தோட்ட இல்லங்கள் (சமுர்த்திப் பயனாளிகள் அல்லாத)<br>17- வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான மீள்குடியேற்ற கூட்டாட்சி இல்லங்கள்<br>18 - கூட்டாட்சி இல்லங்கள்<br>19 - தூதரகங்கள்<br>20 - இல்லங்கள் (சமுர்த்திப் பயனாளிகள்)<br>24 - தோட்ட இல்லங்கள் (சமுர்த்திப் பயனாளிகள்) | ஒழுங்கு முறை இலக்கம் 01<br><br>(இல்ல ஒழுங்கு முறை) |
| அரசு நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில்கள் | 60 - அரச நிறுவனங்கள்<br>61- முப்படைகளின் சுற்றாடல்<br>62- பொலிஸ் திணைக்கள சுற்றாடல்<br>63- அரச மருத்துவ மனைகள் | கட்டண ஒழுங்கு முறை 02<br><br>(வாணிப கட்டண ஒழுங்கு முறை - கட்டண ஒழுங்கு முறை 01 மற்றும் 03 இற்கு உரித்தில்லாத அனைத்து நீர் நுகர்வோர் வகைகள்) |
| | 65- அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள்<br>70- வணிக நிறுவனங்கள்<br>71 - சுற்றுலா விடுதிகள் மற்றும் விருந்தினர் இல்லங்கள்<br>72- கப்பல் சேவைகள்<br>77- கலப்பு அபிவிருத்திகள்<br>79 - தூதரகங்கள்<br>80 - பிற வணிக மற்றும் தனியார் நிறுவனங்கள்<br>82- சபைச் சுற்றாடல்கள் | |
| | 73 - சிறிய மற்றும் நடுத்தர அளவு அல்லாத கைத்தொழில்கள்<br>75 - சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்கள் | |
| பாடசாலைகள், மத மற்றும் வழிபாட்டுத் தலங்கள், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டர் நிறுவனங்கள் மற்றும் பிற இலாப நோக்கற்ற நிறுவனங்கள்) | 12- அரச பாடசலைகள்<br>15- அரச உதவி பெறும் பாடசாலைகள்<br>81-மத மற்றும் புனித இடங்கள் மற்றும் அரசின் அங்கீகரிக்கப்பட்ட தொண்டர் நிறுவனங்கள்<br>85- பிற இலாப நோக்கற்ற நிறுவனங்கள் | கட்டண ஒழுங்கு முறை 03<br><br>(பாடசாலைகள், மத மற்றும் வழிபாட்டுத் தலங்கள், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டர் நிறுவனங்கள் மற்றும் பிற இலாப நோக்கற்ற நிறுவனங்கள் |

03. கழிவுநீர் சேவை கட்டணம் ஒவ்வொரு சுற்றாடலின் நீர் நுகர்வு அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன், 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவின் கீழ், நீர் வழங்கலுக்குப் பொறுப்பான அமைச்சரினால் அதற்காக இடைக்கிடையே திருத்தங்களுடன் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பின் ஒழுங்கு முறைகள் பயன்படுத்திக்கொள்ளப்பட வேண்டும்.

04. கழிவுநீர் சேவைகளுக்கு கட்டணம் வசூலிக்கும்போது ஒவ்வொரு சுற்றாடலுக்கும் தேவையான நீர் நுகர்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையிடம் இருந்து பெறப்பட வேண்டும்.

05. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர் விநியோகத்திற்கு மேலதிகமாக, பிற மாற்று நீர் ஆதாரங்களைப் பயன்படுத்தும்போது, கொழும்பு மாநகர சபையால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் மேலதிக கட்டணம் பயன்பாட்டுக் கட்டணமாக அறவிடப்பட வேண்டும். அக்கட்டணம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையினால் அறவிடப்படும் பயன்பாட்டுக் கட்டணத்தை விட அதிகமாக இருக்கக் கூடாது.

06. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் நீர் வழங்கல் இன்றி கழிவுநீர் சேவை மாத்திரம் பெறப்பட்டால், கொழும்பு மாநகர சபையின் அதிகாரிகளினால் வாடிக்கையாளரின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட களச்சோதனைக்குப் பின் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டு, நீர் நுகர்வு மதிப்பின் அடிப்படையில் மேலே உள்ள இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானிக்கப்பட வேண்டும்.

07. குறிப்பிட்ட மாதத்தில் நீர் நுகர்வு பூஜ்ஜியமாக இருந்தாலும், மாதாந்த கழிவுநீர் சேவை கட்டணம் அனைத்து சுற்றாடல்களுக்கும் பொருந்தும்.

08. ஏதாவதொரு சந்தர்ப்பத்தில், கழிவு நீர் வடிகால் சேவையானது செயலிழந்தால், அதன் மீள் செயற்பாட்டிற்காக, மீண்டும் இணைப்புக் கட்டணமும் அதற்குச் செலவாகும் விலைக்கு ஏற்ப அவ்வப்போது கொழும்பு மாநகர சபையினால் தீர்மானிக்கப்படும் மேலதிகக் கட்டணமும் அறவிடப்படும். அந்தக் கட்டணம் இந்த நோக்கத்திற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையினால் அறவிடப்படும் கட்டணத்தை விட அதிகமாக இருக்கக்கூடாது.

EOG 08-0238

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.